# <u>பொருள்கள்</u>

**1.** தமிழ்நாடு அரசு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( தேர்தல் ) துறை அரசாணை (நிலை) எண்.281 நாள் 09.11.2010 – ன் படி நாகர்கோவில் நகராட்சியுடன் ஆசாரிபள்ளம் பேரூராட்சி மற்றும் பெருவிளை, வடக்கு சூரங்குடி, காந்திபுரம், கரியமாணிக்கபுரம் ஆகிய ஊராட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. எனவே சம்மந்தப்பட்ட பகுதி பொதுமக்கள் அனைவரும் 01.01.2012 முதல் தங்கள் பகுதியில் நிகழும் பிறப்பு /இறப்பு பதிவுகளை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள்ளாக இந்நகராட்சி அலுவலகத்தில் பதிவு செய்திடவும் 2010– 2011 ம் வருடஙகளில் தஙகள் பகுதிகளில் நிகழ்வுற்ற பிறப்பு / இறப்பு சான்றுகள் தொடர்பாக நகராட்சி அலுவலகத்தை அணுகக்கேட்டும் பொதுமக்களுக்கு தினசரி பத்திரிகை மூலமாக விளம்பரம் செய்து அறிவிப்பு செய்யவும் யப்பட்டதற்கு , அதற்கான செலவினத்தை வழஙகவும் மன்றத்தின் அனுமதிக்கு

<u>**அலுவலக குறிப்பு**</u> –நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தினசரி பத்திரிகையில் விளம்பரம் செய்ததற்கும் அதற்குண்டான தொகை வழஙகவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்..20953/2011/எச்.3

**தீர்மான எண் : 94 – அனுமதிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சிப் பகுதியில் அரசால் அறிவிக்கப்பட்ட சிறப்பு திட்டம் IUDM ( ஒருஙகிணைந்த நகர்புற மேம்பாட்டு நிறுவனம் ) 2011–2012 – ன் கீழ் அரசு மானியம் ரூ.400.00 இலட்சம் மற்றும் இந்நகராட்சி பொதுநிதி ரூ.17.00 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.417.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்டவாறு சாலைப்பணிகள், புதியதாக <u>தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும்</u> திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

I. <u>**சாலைப்பணிகள் – மதிப்பீடு தொகை ரூ.212.00 இலட்சம்**</u>

| வ.எண். | பணியின் பெயர் | நீளம் (கிலோ) மீட்டரில் | அகலம் ( மீட்டரில்) | மதிப்பீடு தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.20 காந்திபுரம் என்.ஜி.ஓ.காலனி குறுக்கு தெருவில் தார்தளம் அமைத்தல் | 0.50 | 5.00 | 5.50 |
| 2 | வார்டு எண்.22 பூச்சுவிளாகம் மெயின்ரோட்டில் தார்சாலை அமைத்தல் | 1.60 | 4.50 | 43.50 |
| 3 | வார்டுஎண்.48 சரலூர் வைத்தியநாதபுரம் சாலையில் தார்தளம் அமைத்தல் | 0.50 | 4.00 | 9.60 |
| 4 | வார்டு எண்.24, கோட்டவிளை ரோட்டில் தார்தளம் புதுப்பித்தல் பணி | 0.70 | 3.50 | 13.50 |
| 5 | வார்டு எண்.22 எறும்புகாடு கோவிதவிளை சாலை தார்தளம் அமைத்தல் | 0.39 | 5.00 | 14.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | வார்டு எண்.23 பள்ளவிளை பழைய இடுகாட்டில் சிமெண்ட் கட்டை அமைத்தல் | 0.36 | 5.00 | 16.50 |
| 7 | வார்டு எண்.23 பள்ளவிளை சானல் ரோட்டில் கோட்டர்ட் மெக்காடம் அமைத்தல் | 0.45 | 4.00 | 8.60 |
| 8 | வார்டு எண்.24 முத்தாரம்மன் திருக்கோவில் தார்தளம் புதுப்பித்தல் பணி | 0.40 | 4.00 | 7.70 |
| 9 | வார்டு எண்.19 வெள்ளாடிச்சி விளையில் தார்தளம் அமைத்தல் | 1.40 | 4.00 | 38.00 |
| 10 | வார்டு எண்.40 வட்டகரை முதல் தொல்லவிளை டேங்க்ரோடு மற்றும் பட்டசாலியன்விளை ரோடு அருகில் இசக்கியம்மன்கோவில் தார்தளம் அமைத்தல் | 1.04 | 6.00 | 32.00 |
| 11 | வார்டு எண்.41, ராஜாக்கமங்கலம் முதல் சூரங்குடி சானல் கரை ரோடு தார்தளம் அமைத்தல் | 1.20 | 4.00 | 23.00 |
| | | 8.54 | | 212.00 |
| II | <u>**புதிதாக தெருவிளக்கு அமைத்தல் – ரூ.105.00 இலட்சம்**</u> | | | |
| 1 | 16 மீட்டர் உயர் கோபுர விளக்கு – 6 எண்ணம் | | | |
| 2 | 12.50 மீட்டர் உயர் கோபுர விளக்கு – 1 எண்ணம் | | | |
| 3 | 10.00 மீட்டர் உயர் கோபுர விளக்கு – 8 எண்ணம் | | | |
| 4 | 85 வாட்ஸ் CFL மின்கம்பத்துடன் – 300 எண்ணம் | | | |
| 5 | 40 வாட்ஸ் வாட்ஸ் CFL மின்கம்பம் இல்லாமல் – 400 எண்ணம் | | | |
| 6 | 40 வாட்ஸ் குழல் விளக்கு அமைப்பு மின் கம்பத்துடன் – 100 எண்ணம் | | | |
| 7 | 40 வாட்ஸ் குழல் விளக்கு அமைப்பு மின்கம்பம் இல்லாமல் – 500 எண்ணம் | | | |
| | 1315 எண்ணம் | | | |
| III | <u>**திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் செய்தல் ரூ.100.00 இலட்சம்**</u> | | | |
| 1 | ஹிட்டாச்சி ஹைட்ராலிக் (Hitachi Hydraulic) – 1 எண்ணம் | | | |
| 2 | டம்பர் பிளேசர் பின்கள் – 39 எண்ணம் | | | |
| 3 | டம்பர் பிளேசர் வாகனம் – 2 எண்ணம் | | | |

<u>அலுவலக குறிப்பு</u> – 1. சாலைப்பணிகள் ரூ.212.00 இலட்சம் புதிய தெருவிளக்குகள் அமைத்தல் ரூ.105.00 இலட்சம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் ரூ.100.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.417.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளவாறு பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. அரசு மானியத்தொகை ரூ.400.00 இலட்சம் போக மீதித்தொகை ரூ.17.00 இலட்சத்தை இந்நகராட்சி பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.12372/2011/இ3

**தீர்மான எண் : 95 – அனுமதிக்கப்பட்டது.**

3. அரசாணை எண்281 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் ( தேர்தல்) துறை நாள் 09.11.2010 மற்றும் அரசாணை எண்.17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் ( தேர்தல் ) துறை நாள் 14.01.2011 – ன் படி நாகர்கோவில் நகராட்சியுடன் கரியமாணிக்கபுரம், பெருவிளை, காந்திபுரம், வடக்கு சூரஙகுடி ஆகிய ஊராட்சிகள் மற்றும் ஆசாரிபள்ளம் பேரூராட்சி ஆகிய பகுதிகள் 25.10.2011 முதல் இணைக்கப்பட்டது.. மேற்படி பகுதிகளில் குடிநீர் மற்றும் இதர பணிகளுக்காக தற்காலிகமாக கீழ்கண்ட விபரப்படி பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்

| வ. எ ண்., | பெயர் | வார்டு | பணி விபரம் | எந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகிறார்கள் | ஊதிய விபரம் மாதம் ஒன்றுக்கு |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ஜானகிராமன் | பெருவிளை | குடிநீர் உடனா ளர் | ஒப்பந்த அடிப்படையில் தொகுப்பூதியம் 01.07.2001 முதல் | தொகுப்பூதியம் – 2040<br>கூடுதலாக குடிநீர் தொட்டி இயக்க ஒன்றுக்கு ரூ.250/– வீதம்<br>4 எண்ணம் – 1000 |
| | | | | | மொத்தம் – 3040 |
| 2 | திரு என்.பாலகிருஷ்ணன் | பெருவிளை | கௌரவ நூலகர் | மதிப்பூதியம் | மாதம் ஒன்றுக்கு ரூ.750/– ரூ. 750 |
| 3 | திரு ஏ,சுந்தர்ராஜ் | பெருவிளை | குடிநீர் உடனாளர் | தினக்கூலி அடிப்படையில் 10.08.1990 முதல் | தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் ( மாபட்ட ஆட்சித் தலைவரால் அஙகீகரிக்கப் பட்ட தினக்கூலி சம்பளம் ரூ.8525/– |
| 4 | திரு எம்.சம்சுதீன் | வடக்கு சூரஙகுடி | குடிநீர்உட னாளர் | தினக்கூலி அடிப்படையில் 26.07.1994 முதல் | தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் ( மாவட்ட ஆட்சித்தலைவரால் அஙகீகரிக்கப்பட்ட தினக்கூலி சம்பளம் ரூ.8525/– |
| 5 | திரு முகம்மது தாஹர் | வடக்கு சூரஙகுடி | கௌரவ நூலகர் | மதிப்பூதியம் | ரூ.750/– |
| 6 | திரு வி.இராதாகிருஷ்ணன் | காந்திபுரம் | குடிநீர் உடனாளர் | தினக்கூலி அடிப்படையில் 13.09.1982 முதல் | தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் ( மாவட்ட ஆட்சித்தலைவரால் அஙகீகரிக்கப்பட்ட தினக்கூலி சம்பளம் ரூ.8525/– |
| 7 | திரு கே.சுதாகரன் | காந்திபுரம் | குடிநீர்உட னாளர் | தினக்கூலி அடிப்படையில் 1992 முதல் | தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் ( மாவட்ட ஆட்சித்தலைவரால் அஙகீகரிக்கப்பட்ட தினக்கூலி சம்பளம் ரூ.8525/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | திரு எஸ்.ராஜன் | காந்திபுரம் | குடிநீர் உடனாளர் | தொகுப்பூதியம் 01.05.2008 முதல் | தொகுப்பூதியம் ரூ.2000/- குடிநீர் தொட்டி இயக்க ஒன்றிற்கு ரூ.250/- வீதம் 7 எண்ணம் ரூ.1750 ரூ 3750/- |
| 9 | திருறி.ஈஸ்வரமூர்த்தி | காந்திபுரம் | குடிநீர் உடனாளர் | தொகுப்பூதியம் 01.12.2010 முதல் | தொகுப்பூதியம் ரூ.2000/- குடிநீர் தொட்டி இயக்க ஒன்றிற்கு ரூ.250/- வீதம் 7எண்ணம் ரூ.1750 ரூ.3750/- |
| 10 | திரு ராஜேந்திரன் | கரியமாணிக் க புரம் | குடிநீர் உடனாள் | தொகுப்பூதியம் 01.06.2000 முதல் | தொகுப்பூதியம் ரூ.600/- குடிநீர் தொட்டி இயக்க ஒன்றிற்கு ரூ.250/- வீதம் 6எண்ணம் ரூ.1500 .2100 |
| 11 | திரு மணி | கரியமாணிக் கபுரம் | குடிநீர் உடனாளர் | தொகுப்பூதியம் 11.05.2007 முதல் | தொகுப்பூதியம் ரூ.600/- குடிநீர் தொட்டி இயக்க ஒன்றிற்கு ரூ250/- வீதம் 5 எண்ணம் ரூ.1250 ரூ.1850 |
| 12 | திரு அருள்ஜெகன் | ஆசாரிபள்ளம் | கணணி இயக்கு பவர் | 30.12.2004 முதல் உப்பந்த அடிப்படை 01.04.2011 முதல் தினக்கூலி ரூ.275/- வீதம் | ரூ.8500/- |
| 13 | திருறி.நிர்மலா | ஆசாரிபள்ளம் | குடிநீர் உடனாளர் | 30.06.2005 முதல் ஒப்பந்த அடிப்படையில் ரூ.8500/- மாதம் ஒன்றிற்கு | ரூ.8000/- |

நாகர்கோவில் நகராட்சியுடன் தற்போது இணைக்கப்பட்டுள்ள ஒரு பேரூராட்சி மற்றும் நான்கு ஊராட்சிகளையும் சேர்த்து நாகர்கோவில் நகராட்சியின் பரப்பளவு இரு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் குடிநீர் திட்ட பணிகளை தஙகு தடையின்றி பொதுமக்களுக்கு கிடைத்திட தற்போதுள்ள நகராட்சி

பணியாளர்களை கொண்டு பராமரிக்க இயலாத காரணத்தினால் ஏற்கனவே பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் குடிநீர் பிரிவில் மற்றும் இதர பிரிவில் பணியாற்றி வந்த தற்காலிக பணியாளர்கள் மற்றும் தொகுப்பூதிய பணியார்களை கொண்டே மேற்கண்ட பகுதிகளில் குடிநீர் வழஙக நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசிடமிருந்து மறு உத்தரவு வரும் வரை மேற்படி பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து செயல்படுத்திடவும் மேலும் தினக்கூலி மற்றும் தொகுப்பூதியம் அடிப்படையில் வழஙகப்படவேண்டிய 3 மாதத்திற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.1,99,845/– வழஙகவும்,மேலும் மேற்கண்ட ஊழியர்கள் தொடர்ந்து பணியாற்றும் காலம் வரை நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் தொடர்ந்து ஊதியம் வழஙகவும், மேற்படி பணியாளர்களின் பணி குறித்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் மூலமாக அரசிடமிருந்து தக்க உத்தரவு கிடைத்திட மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. 01.10.1996 – க்கு முன்னர் நகராட்சியில் பணியாற்றிய தினக்கூலி பணியாளர்களைஅரசாணை எண்.125 நாள் 27.05.1999 மற்றும் அரசாணை எண்.21 நாள் 23.03.2006 – ன் படி நுழைவு பணியிடஙகளில் பணி அமர்த்தப்பட்டது. தற்சமயம் முதல் தினக்கூலி பணியாளர்களை நியமனம் செய்ய வழிவகை இல்லாத நிலையில் நாகர்கோவில் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் அரசிடமிருந்து மறு உத்தரவு வரும்வரை மேற்படி பணியாளர்களை கொண்டே குடிநீர் பணி தஙகு தடையின்றி பொதுமக்களுக்கு கிடைக்க ஏற்கனவே வழஙகி வரும் ஊதியத்தின் அடிப்படையில் ஊதியம் வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

2. ஏற்கனவே வழஙகப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் 3 மாதத்திற்கான ஊதியம் வழஙக உத்தேச செலவினம் ரூ.1,99,845/– ற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேலும் ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளாக இருந்து அரசைாணையின்படி தற்போது நாகர்கோவில் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட மேற்படி பகுதிகளுக்கு பொதுமக்களின் அத்தியாவசிய அடிப்படை பணிகளை தஙகு தடையின்றி வழஙகுவதற்கு மேலே குறிப்பிட்டுள்ள பணியாளர்களின் பணி நிலை குறித்து தக்க உத்தரவு வழஙக நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசிடம் அனுமதி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.23958/2011/இ1

**தீர்மான எண் : 96 – அனுமதிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 – ல் சேருகின்ற குப்பைகள் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்த நகராட்சியில் போதிய ஆட்கள் இல்லாததாலும் 01.01.2012 முதல் 31.03.2012 வரை 89 நாட்களுக்கு வெளியிலிருந்து ஆட்களை வினியோகம் பண்ணி குப்பைகளை அகற்ற மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் பண்ணிய விலை விகிதம் நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் மொத்தம் மண்டலம் 1– ற்கு ஒரு நாளைக்கு 50 நபர் வீதம் 89 நாட்களுக்கு ரூ.12.25 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. வெளியிலிருந்து ஆட்களை டெண்டர் கோரி அமர்த்த மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி தொகை ரூ.12.25 லட்சம் பொது நிதியிலிந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 13017/2010/இ1

**தீர்மான எண் : 97 – அனுமதிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சிக்குட்பட்ட மண்டலம் 2 – ல் சேருகின்ற குப்பைகள் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்த நகராட்சியில் போதிய ஆட்கள் இல்லாததாலும் 01.01.2012 முதல் 31.03.2012 வரை 89 நாட்களுக்கு வெளியிலிருந்து ஆட்களை வினியோகம் பண்ணி குப்பைகளை அகற்ற மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் பண்ணிய விலை விகிதம் நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் மொத்தம் மண்டலம் 2– ற்கு ஒரு நாளைக்கு 50 நபர் வீதம் 89 நாட்களுக்கு ரூ.12.25 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. வெளியிலிருந்து ஆட்களை டெண்டர் கோரி அமர்த்த மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி தொகை ரூ.12.25 லட்சம் பொது நிதியிலிந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 13017/2010/இ1

**தீர்மான எண் : 98 – அனுமதிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சிக்குட்பட்ட மண்டலம் 3 – ல் சேருகின்ற குப்பைகள் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்த நகராட்சியில் போதிய ஆட்கள் இல்லாததாலும் 01.01.2012 முதல் 31.03.2012 வரை 89 நாட்களுக்கு வெளியிலிருந்து ஆட்களை வினியோகம் பண்ணி குப்பைகளை அகற்ற மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் பண்ணிய விலை விகிதம் நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் மொத்தம் மண்டலம் 3– ற்கு ஒரு நாளைக்கு 50 நபர் வீதம் 89 நாட்களுக்கு ரூ.12.25 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u> – 1. வெளியிலிருந்து ஆட்களை டெண்டர் கோரி அமர்த்த மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி தொகை ரூ.12.25 லட்சம் பொது நிதியிலிந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 13017/2010/இ1

**தீர்மான எண் : 99 – அனுமதிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சிக்குட்பட்ட மண்டலம் 4 – ல் சேருகின்ற குப்பைகள் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்த நகராட்சியில் போதிய ஆட்கள் இல்லாததாலும் 01.01.2012 முதல் 31.03.2012 வரை 89 நாட்களுக்கு வெளியிலிருந்து ஆட்களை வினியோகம் பண்ணி குப்பைகளை அகற்ற மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் பண்ணிய விலைவிகிதம் நாள் ஒன்றுக்கு ரூ.275/– வீதம் மொத்தம் மண்டலம் 4– ற்கு ஒரு நாளைக்கு 50 நபர் வீதம் 89 நாட்களுக்கு ரூ.12.25 லட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு –</u> 1. வெளியிலிருந்து ஆட்களை டெண்டர் கோரி அமர்த்த மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்படி தொகை ரூ.12.25 லட்சம் பொது நிதியிலிந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 13017/2010/இ1

**தீர்மான எண் : 100 – அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30 – ல் தழியபுரம் பூஙகாவில் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் நடைபாதை , நிரூற்று, இரண்டு பக்கமும் கதவுகள் மற்றும் மின்வசதி செய்யவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10,00,000/– க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>– மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.20137/2011/இ1

**தீர்மான எண் : 101 – அனுமதிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சிக்குட்பட்ட சர்.சி.பி.இராமசாமி நினைவு பூஙகாவில் பொதுமக்களுக்கு கண்காட்சியாக mic 21 ரக போர்விமானம் நிறுத்துவதற்கு பூஙகாவை சுற்றி பிளாட்பாம் அமைத்தல் மற்றும் ஸ்டீல் கிரில் அமைக்கும் பணிக்கு ரூ.9,70,000/– மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.672 நாள் 15.09.2011 – ன் படி மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தகாரர் திரு.றி.வீரமணி என்பவருக்கு உத்தரவு வழஙகப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்படி வேலைகள் செய்து வரும் நிலையில் விமானப்பதிவு அலுவலகத்தில் இருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் ( 44 RS4/208 Eng நாள் 01.08.2011 ) mic 21 ரக போர்விமானத்தை நிறுவுவதற்கு கீழ்குறிப்பிட்டுள்ள விபரப்படியான பணிகள் செய்ய குறிப்பிடப்பட்டுள்ளது.

1. 20 டன் capacity கிரேன் பயன்படுத்துதல்
2. Air compresser :மூலம் பெயிண்டிங செய்தல்
3. Electric arc welding machine மூலம் வெல்டிங செய்தல்
4. painter with spray gun and hose
5. 10 Feet height ladder பயன்படுத்துதல்
6. பணியாளர்கள் தஙகுவதற்கு தற்காலிக ஷெட் அமைத்தல்
7. தினசரி கூலி பணியாளர்கள் செலவினம்
8. பொருட்களை பாதுகாப்பதற்கு தேவையான காவலர் கூலி
9. விமானத்தை நிறுத்துவதற்கு விமானபடை பிரிவில் இருந்து வரும் பணியாளர்களுக்கு தேவையான வசதிகள் செய்துதல்
10. இடத்தினை சுத்தம் செய்தல்
11. Erection – ற்குதேவையான angle, channel , rope, Bolt nut, paint மற்றும் இதரப்பொருட்கள் வாஙகி பயன்படுத்துதல்
12. Temporary Barricading அமைத்தல்

மேற்படி பணிகளை உடனடியாக செய்ய வேண்டி உள்ளதால் ஒப்பந்தப்புள்ளிகோரி வேலை செய்ய காலமாதம் ஆகும் என்பதன் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணியினை மேற்கொண்டுவரும் திரு.வீரமணி,. ஒப்பந்தகாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் திருத்திய மதிப்பீட்டின்படி பணிமேற்கொள்ளமன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u> – 1. ஏற்கனவே உள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9,70,000/– ற்குள் தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீட்டின்படி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி செய்துவரும் ஒப்பந்தகாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.12080/2011/இ1

**தீர்மான எண் : 102 – அனுமதிக்கப்பட்டது.**

10. நகர்மன்ற தீர்மானம் 195 நாள் 25.02.2011 – ன்படி இந்நகராட்சி பகுதிகளில் உள்ள 25 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவுகளை அப்புறப்படுத்த தனியார் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலைமயில் தற்போது 34 வார்டுகளிலும் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளையும் சோத்து திடக்கழிவுகளை அப்புறப்படுத்த 27.12.2011, 28.12.2011 மற்றும் 29.12.2011 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஆனால் யாரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கப்படவில்லை. இதனால் புதியதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையுள்ளது. எனவே நகரில் பொது சுகாதார நலன் கருதி புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளில் தற்போது பணி மேற்கொள்ளும் ஒப்பந்தக்காரார் மூலம் திடக்கழிவுகளையும், சாக்கடை மண் ஆகியவற்றை அப்புறப்படுத்தவும் மன்றம் அனுமதி கோரப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u> – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.15700/2011/எச்.1

**தீர்மான எண் : 103 – அனுமதிக்கப்பட்டது.**